செய்தி வெளியீடு எண்:062 நாள் : 06.02.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழகத்தில் காய்ச்சல் போன்ற தொற்றும் நோய்கள் பரவாமல் தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதால், அனைத்து வகையான காய்ச்சல்களும் கட்டுப்பாட்டில் உள்ளது. இருப்பினும் டெல்லி, ராஜஸ்தான், பஞ்சாப், அரியானா, குஜராத், போன்ற வடமாநிலங்களிலும், தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம் போன்ற அண்டை மாநிலங்களிலும் பன்றிக் காய்ச்சலின் தாக்கம் சற்று அதிகமாக உள்ளதாலும், இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் ஏற்கனவே 24.01.2015 அன்றும், அதேபோல் இன்றும் (06.02.2015) தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

2) இந்த ஆய்வுக் கூட்டத்தில், பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.சபிதா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.கே.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆப., உயர்கல்வித்துறை செயலாளர் செல்வி.அபூர்வா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு.கோ. பிரகாஷ், இ.ஆ.ப., தேசிய ஊரக நலவாழ்வு குழும இயக்குநர் டாக்டர் சி.என். மகேஸ்வரன், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு ஆனந்த், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் கீதாலட்சுமி, மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள் இயக்குநர் டாக்டர் எ. சந்திரநாதன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மத்திய சுகாதாரத் துறை மண்டல இயக்குநர் திரு டி. ஜோ, பொதுப்பணித் துறை சிறப்புச் செயலர் திரு கே.வி. இராஜன் மற்றும் சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழகத்தில் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மேற்கொள்ளவேண்டிய தொடர் நடவடிக்கைகள் ஆய்வு செய்யப்பட்டது.

3) பன்றிக் காய்ச்சல் ஒரு சாதாரண ஃபுளூ காய்ச்சல் (Seasonal Influenza) என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவித்த போதிலும், பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஏற்கனவே இருதய நோய், சர்க்கரை நோய், காசநோய் போன்ற நோய்கள் இருந்தால் குறிப்பாக முதியவர்கள், குழைந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் போன்றவர்களுக்கு பன்றிக் காய்ச்சலினால் கூடுதல் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

4) இந்த காய்ச்சலைக் கண்டறிவதற்கு கிங் மருத்துவ நிலையம் உட்பட ஆறு ஆய்வு மையங்களும், புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் ஒரு ஆய்வு மையமும் செயல்படுகின்றன. இது தவிர இந்த காய்ச்சலைக் கண்டறிவதற்கு பரிசோதனை செய்ய 13 தனியார் ஆய்வு மையங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5) பன்றிக் காய்ச்சல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கென, தனியாக சிறப்பு வார்டுகள் தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனை, அனைத்து மாவட்ட மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டு, சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நோய்க்கு உரிய சிகிச்சை அளிக்க, மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பன்றிக் காய்ச்சலுக்கு ஒசில்டாமிவீர் (டாமி புளூ) என்ற மருந்தை மருத்துவரின் ஆலோசனைப்படி உட்கொண்டால் இந்நோயை எளிதாக குணப்படுத்தலாம். தமிழக அரசு மருத்துவ நிலையங்களில் தேவையான அளவு டாமி புளூ மாத்திரைகள் (3 இலட்சம்) தயார் நிலையில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளது.

6) இத்தகைய காய்ச்சலை வருமுன் தடுப்பது எளிது. எனவே, பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், கீழ்க்கண்ட தடுக்கும் முறைகளை பொதுமக்கள் கடைப்பிடிக்குமாறும் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

- இருமும் போதும், தும்மும் போதும் வாய் மற்றும் மூக்கை கைக்குட்டை அல்லது துணியால் மூடிக் கொள்ள வேண்டும்.
- கைகளை அடிக்கடி சோப்பு போட்டு நன்கு கழுவ வேண்டும்.
- இருமல் மற்றும் தும்மலின் போது பயன்படுத்திய கைக்குட்டை மற்றும் இதர துணிகளை நன்கு துவைத்து வெயிலில் காய வைத்து பயன்படுத்தவும்.
- கைகளைக் கழுவாமல் மூக்கு, வாய் மற்றும் கண்களை தொடக்கூடாது.
- காய்ச்சல், இருமல் மற்றும் தொண்டை வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனே அருகில் உள்ள மருத்துவரை அணுகவும்.
- ஃப்ளூ காய்ச்சல் அறிகுறி இருப்பின், பள்ளிகள், பணியிடம் மற்றும் பொது இடங்களுக்கு செல்வதை தவிர்க்கவும்.
- பொதுமக்கள் பன்றிக் காய்ச்சல் காணப்படும் மாநிலங்களுக்கு அல்லது இடங்களுக்கு செல்லும்போது, 20 நபர்களுக்கு மேற்பட்ட நபர்கள் கூடும் இடங்களிலும், யாத்திரிகர்களாக செல்லும் போதும், அந்த இடங்களில் மேற்குறிப்பிட்ட அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் கடைபிடிக்க வேண்டும்.
- புகைப்பிடிப்பதை தவிர்க்க வேண்டும்.
- ஃப்ளூ காய்ச்சல் அறிகுறி இருப்பின், மற்றவர்களிடம் இருந்து சுமார் ஒரு மீட்டர் இடைவெளி விட்டு விலகி, நோய் பரவலை தவிர்க்கவும்.
- ஃப்ளூ காய்ச்சல் அறிகுறி இருந்தால் மற்றவர்களிடம் கை குலுக்குதல் மற்றும் தழுவுதலை தவிர்க்கவும்.

- சுயமாக மருந்துகளை உட்கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். மேலும் மருந்துக்கடைகளில் மருத்துவரின் சீட்டு இல்லாமல் மருந்துகளை வாங்கி உட்கொள்வதையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

7) தமிழக அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குனரகத்தில் பன்றிக் காய்ச்சல் மற்றும் அனைத்து வகையான காய்ச்சல்கள் குறித்து 24 மணி நேரமும் மருத்துவ ஆலோசனைகள் பெறும் வகையில் தகவல் மையம் (தொலைபேசி எண்.044 – 24350496, 044- 24334811, 94443 40496 மற்றும் 93614 82899) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தகவல்கள் பெற 104 சேவையையும் பயன்படுத்திக் கொள்ளலாம். போலி மருத்துவர்கள் எவரேனும் சிகிச்சை அளிக்கின்றனரா என்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்குமாறும், மருந்து கடைகளில் சிகிச்சை அளிப்பதையும், மருத்துவர்களின் சீட்டு இல்லாமல் மருந்துகள் வழங்குவதையும் கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மருந்து கட்டுப்பாடு துறை அலுவலர்களை அரசு அறிவுறுத்தியுள்ளது.

8) நமது மாநிலத்தில் வசிப்பவர்களுக்கும் அண்டை மாநிலங்களுக்கு சென்று திரும்பி வருபவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மீனம்பாக்கம் விமான நிலையம், சென்னை சென்ட்ரல் மற்றும் சென்னை எழும்பூர் இரயில் நிலையங்களிலும் கோயம்பேடு பேருந்து நிலையத்திலும் விழிப்புணர்வு மற்றும் ஆலோசனை முகாம்கள் உடனடியாக அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு தலைமை மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் டெங்கு, பன்றிக் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களுக்காக விழிப்புணர்வு மற்றும் பிரத்தியோக சிகிச்சை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

9) இதேபோல் டெங்கு மற்றும் பூச்சிகளால் பரவும் நோய்கள் வெகு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு அவைகள் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ளது. இராஜபாளையம், திருப்பூர், தேனி, திண்டுக்கல் மற்றும் கரூர் ஆகிய இடங்களில் காணப்பட்ட காய்ச்சல் நிகழ்வுகள், தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது. பொதுமக்களுக்கு சுகாதார நலக் கல்வி வாயிலாக விழிப்புணர்வு அளித்து, நன்னீரில் வளரக்கூடிய ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாகும் ஆதார நிலைகளை அழிக்கும் பணியில் அவர்களையும் ஈடுபடுத்தி தடுப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. அரசு மருத்துவமனைகளில் போதுமான அளவில் மருந்துகள், இரத்தம் மற்றும் இரத்தக் கூறுகள் இருப்பில் உள்ளது.

10) போலி மருத்துவர்கள் சிகிச்சை அளிப்பதும், மருத்துவர்களின் மருத்துவச் சீட்டு இன்றி மருந்துகள் விநியோகிக்கும் மருந்தகங்கள் மீதும் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. பன்முகத் தன்மை வாய்ந்த நடவடிக்கைகள் (intensive sustained multi dimensional effort) மூலம் தற்போது அனைத்து வகையான காய்ச்சல்களும் கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும் பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து எடுத்து வரும் நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளது.

**11)** தமிழகத்தில் பன்றிக் காய்ச்சலைத் தடுப்பதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும், பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான சிசிக்சை அளிக்கவும் அனைத்து ஏற்பாடுகளும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி **அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி செய்யப்பட்டுள்ளன. எனவே பன்றிக் காய்ச்சல், டெங்கு போன்ற மற்ற காய்ச்சல் தொடர்பாக பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9**